அந்திநேர பொழுதிலே அலையுகரையை தழுவுதே
கையசைத்தும் சூரியனும் கண்கள் மூடப்போகுதே
ஈரக்காற்றின் அசைவிலே இதையம் எங்கும் கசியுதே
உள்ளுணர்வும் ஒன்றுமட்டும் ஓலம் இட்டு அழுகுதே
கடலை அளப்பதற்கு கைவிரல் போதாது
கடல் புலிகள் தியாகங்கள் சொல்ல முடியாது

அந்திநேர பொழுதிலே அலையுகரையை தழுவுதே
கையசைத்தும் சூரியனும் கண்கள் மூடப்போகுதே

உலகம் முழுதும் உலவிச்சென்று உதவிசெய்த உள்ளங்கள்
உணர்வு கொண்டு மண்ணை எண்ணி உயரச் சென்ற வள்ளங்கள்
கடலைமுழுதும் அளந்தவர் கப்பலில் பொருளை கொணர்ந்தவர்
சதிகள் பின்னும் மலைகள் தாண்டி சரிதம் எழுதி நிமிர்ந்தவர்

அந்திநேர பொழுதிலே அலையுகரையை தழுவுதே
கையசைத்தும் சூரியனும் கண்கள் மூடப்போகுதே

மொழிகள் இனங்கள் கடந்து சென்று தேசம் அணைத்த சிறகுகள்
கடலில் தடைகள் தாண்டித்தாண்டி வளங்கள் கொணர்ந்த உறவுகள்
ஆயுதங்கள் தந்தவர் அலைகள் ஏறி வந்தவர்
தாயகத்தின் உயிரைபேண தங்கள் உயிரை ஈந்தவர்

அந்திநேர பொழுதிலே அலையுகரையை தழுவுதே
கையசைத்தும் சூரியனும் கண்கள் மூடப்போகுதே
ஈரக்காற்றின் அசைவிலே இதையம் எங்கும் கசியுதே
உள்ளுணர்வும் ஒன்றுமட்டும் ஓலம் இட்டு அழுகுதே
கடலை அளப்பதற்கு கைவிரல் போதாது
கடல் புலிகள் தியாகங்கள் சொல்ல முடியாது
அந்திநேர பொழுதிலே அலையுகரையை தழுவுதே
கையசைத்தும் சூரியனும் கண்கள் மூடப்போகுதே